1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிராந்துருக் கோட்டை விவசாயப் பண்ணையில் 1,113 ஏக்கர் 0 றூட் 37.76 பேர்ச் காணி மற்றும் தம்மின்ன விவசாயப் பண்ணையில் 100 ஏக்கர் காணி கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும்	கிராந்துருக் கோட்டை மற்றும் தம்மின்ன விவசாயப் பண்ணையின் காணி மதிப்பிடப்பட்டுஇலங்கை மகாவலி அதிகார சபையினால் கம்பனிக்கு	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் கணக்கீட்டு நியமம் 17.4 பந்தியின் பிரகாரம் அந்தக் காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கையளிக்கப்படவில்லை. கம்பனிக்கு அந்த காணி பயன்பாட்டுக்காக மட்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 10.21 பந்தியின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் தவறுகளை ஒப்பிட்டு கடந்த ஆண்டுகளின் எண்களை சீர் செய்து நிதி கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், கம்பனி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் தவறுகள் ஒப்பிட்டு சீர் செய்து நிதி கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	கடந்த ஆண்டிற்கான சீராக்கமாக வருமான ஒதுக்கத்திலிருந்து ரூபா 13,454,122 கழிக்கப்பட்டு ரூபா 7,402,549 சேர்க்கப்பட்டிருந்த போதிலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 10.23 பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கிறேன்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கடந்த ஆண்டிற்கான சீராக்கம் வெளிப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 28.18 இன் பிரகாரம் பணிக்கொடை கணிப்பிடும் போது ஆயுட்கால எண்ணிக்கை பெறுமதியிடல் முறையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் கணக்கீட்டு நியமம் 28.18 பிரகாரம் பணிக்கொடை கணக்கிடப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஆயுட்கால எண்ணிக்கை பெறுமதியிடல் முறையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை பொறுப்புக்கன் கணிக்கப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும்.
(உ)	வணிக மரங்களாக விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டு ரூபா 9,446,800 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த தம்மின்ன விவசாயப் பண்ணையின் 195 தேக்கு மரங்கள் மற்றும் கிராந்துரு கோட்டை விவசாயப் பண்ணையின் 211 தேக்கு மரங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த தேக்கு மரங்கள் மதிப்பீடு செய்வதற்காக அரச மர கூட்டுத்தாபனத்திலிருந்து தள மதிப்பு 2025 பெப்ரவரி மாத்திலேயே பெற முடிந்தது. அதனால் அம் மரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் சேர்க்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இந்த மரங்களை மதிப்பீடு செய்து அப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

	கணக்கீட்டு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆண்டின் வருமானம் மற்றும் செலவுகளை சரியாக இனங்காண்பதற்கு பதிலாக முந்தைய ஆண்டுகளின் நிதி விளைவுகளில் கம்பனி தொடர்ச்சியாக சீர் செய்திருந்தமையினால் 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட முறையே ரூபா 1,325,555 தொகையான நட்டம் மற்றும் ரூபா 167,815 தொகையான இலாபம் மற்றும் ரூபா 295,352 தொகையான நட்டத்திற்காக அடுத்த ஆண்டில் முறையாக ரூபா 3,376,919, ரூபா 2,089,263 மற்றும் ரூபா 20,856,669 தொகையான கடந்த ஆண்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,695,098 தொகையான நட்டம் மற்றும் ரூபா 627,268 தொகையான இலாபம் மற்றும் ரூபா 6,346,924 தொகையான நட்டம் வரையில் நிதி விளைவு 28 சதவீதம் தொடக்கம் 2048 சதவீதம் வரையான வேறுப்பட்ட பெறுமதிகளை கொண்டிருந்தது.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	ஆண்டிற்குரிய வருமானம் செலவுகள் சரியாக இனங்காணப்படுவதற்காக பொறுப்புடைய கட்டுப்பாட்டு அமைப்பொன்று நிறுவப்படுதல் வேண்டும்.
(ஆ)	கம்பனிக்கு சொந்தமான தம்புத்தேகமவில் உள்ள நிராவிய விவசாய பண்ணை, கந்தளை விவசாய பண்ணை, பொலன்னறுவையில் உள்ள சித்தபுர விவசாய பண்ணை மற்றும் வெலிகந்தையில் உள்ள முத்துவெல்ல விவசாய பண்ணை 2005-2010 ஆண்டு காலப்பகுதியில் முறையான எழுத்துப்பூர்வ ஆவணங்கள் பரிமாற்றமின்றி மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ் விவசாய பண்ணைகளுக்குச் சொந்தமான கூட்டு பெறுமதி ரூபா 22,335,573 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கம்பனியினால் பயன்படுத்தப்படாவிடினும், கம்பனியின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும் அச் சொத்துக்கள் இலங்கை மகாவலி அதிகார சபை அல்லது கம்பனியினால் பௌதீக ரீதியாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த சொத்துக்கள் 2025 ஆம் ஆண்டில் கம்பனியினால் பௌதீக ரீதியில் ஒப்பாய்வு செய்யப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன்.	கம்பனிக்குரிய சொத்துக்கள் மட்டும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 652,809 ஆன மிகை கட்டணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட	2025 ஆம் ஆண்டில் மிகை கட்டணங்கள் கணக்கில் சேர்க்கப்பட்டு மற்றும் நிலுவை தொகைகள் செலுத்தப்பட்டு	அனைத்து பொறுப்புகளும் இனங்காணப்பட்டு கணக்கீடு

	வேண்டிய ரூபா 402,513 தொகையான மிகை கட்டணம் மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.	செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் செலவாக கணக்கீடு செய்யப்படாத ரூபா 441,111 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவு மீளாய்வாண்டிலும் முன்கூட்டியே செலுத்தப்பட்ட தொகையாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.	2025 ஆம் ஆண்டில் இலாப நட்ட கணக்கிற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	இந்த செலவு 2022 ஆம் ஆண்டை சேர்ந்தமையினால், அதை முந்தைய ஆண்டின் சீர் செய்தலாக இனங்காணப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 இல் கைதவிர்ப்பு செய்யப்படாத ரூபா 2,285,000 தொகையான 5 வாகனங்கள் மற்றும் 2 ட்ரெக்டர் ட்ரேலர் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் மீதிகள் அகற்றப்பட்டிருந்தது.	இந்த வாகனங்கள் 2025 ஆம் ஆண்டில் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	தொடர்ந்தும் கம்பனியின் பயன்பாட்டில் உள்ள 5 வாகனங்கள் மற்றும் 2 ட்ரெக்டர் ட்ரேலர்கள் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் மீதிகளாக மீண்டும் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(ஊ)	நீண்ட காலமாக கணக்குகளில் செலுத்தப்பட வேண்டிய நிலுவை சம்பளம் ரூபா 3,992,144 தொகை மற்றும் அதற்குரிய ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு தொகை ரூபா 1,144,999 மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி பங்களிப்பு தொகை ரூபா 166,208 தொடர்பாக தொழிலாளர் திணைக்களத்தின் ஊடாக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் அதற்காக போதுமான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் தவணைகளாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

விடயம்		தொகை (ரூபா)	வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொது ஒதுக்கம்				
(i)	மகாவலி பொருளாதார முகவராண்மை	388,575,802	பெறுமதி உறுதி செய்யக் கூடிய சான்றுகள்	இந்த மீதிகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை வள அபிவிருத்தி பிரிவாக இருந்த	மீதி உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு
(ii)	கொத்மலை பால் அபிவிருத்தி நிலையம்	2,900,000	-மேற்படி-		

(iii)	ஐரோப்பா பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம்	3,583,706	மூலதனமாக கணக்கீடு செய்வதற்கு தொடர்புடைய ஆவணங்கள்	போது பிரிவுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தொகையாகும். இது தொடர்பில்	சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(iv)	வெளிநாட்டு நிதியுதவி	5,729,782	-மேற்படி-	கம்பனியிடம் எந்தவொரு	
(ஆ)	மூலதன ஒதுக்கம்	14,159,541	-மேற்படி-	குறிப்பும் இல்லை.	

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு		இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 5(1) ஆம் பிரிவு	2020 பெப்ரவரி மாதம் நிவாரிய பண்ணையின் சேவையிலிருந்து விலக்கப்பட்ட மூன்று ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,320,523 ஆன பணிக்கொடைகள் கணக்காய்வுத் திகதியான 2025 மார்ச் 18 வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	செலுத்த வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் இரண்டாம் பகுதியின் 16 ஆம் பிரிவு	2020 யூலை மாதம் தொடக்கம் 2023 ஒக்தோபர் வரையில் 40 மாதங்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,296,426 ஆன பங்களிப்பு தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் நிலுவைத் தொகை செலுத்தி நிறைவு செய்யப்பட்டிருந்தது.	நிலுவை பங்களிப்பு தொகை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	1971 இன் 24 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் இரண்டாம் பகுதியின் 15 ஆம் பிரிவு	2013 சனவரி தொடக்கம் 2022 திசெம்பர் வரையில் 98 மாதங்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 23,444,504 ஆன பங்களிப்பு தொகை கணக்காய்வு திகதியான 2025 மார்ச் 18 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் தவணை முறையில் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	நிலுவை பங்களிப்பு தொகை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

(ஈ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஆம் II பகுதியின் 102 ஆம் பிரிவு	கம்பனி வருமான வரிக்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் தேவைான நடவடிக்கைகள் எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன்.	வருமான வரிக்காக பதிவு செய்து கொள்வதற்கோ அல்லது வரி விடுவித்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை			
(i) செயற்பாட்டு கைநூலின் 3.2 ஆம் பிரிவு	அனைத்து பொது முயற்சிகளின் பதவியணிக்காகவும் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் ஊதியக் கட்டமைப்பிற்காக பணியாளர் சபை அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட வேண்டிய போதிலும் கம்பனி அதற்கு அமைவாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கின்றேன்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii) பொது முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தி	செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மூலோபா திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவு பதிவேடு வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை தொடர்பில் அதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறே திட்டமிடல் மற்றும் பாதீடு பொது முயற்சிகள்

				திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்காக செயன்முறை யொன்று செயற்படுத்தல் வேண்டும்.
(ஊ)	2013 செப்தெம்பர் 11 ஆம் திகதிய இலக்கம் 02/2013 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி	ரூபா 11,013,043 தொகையான பணிக்கொடை ஒதுக்கமொன்று இனங்காணப்பட்டிருந்த போதிலும் அத் தொகை தனியான கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணிக்கொடை தொகை தனியான கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	பணிக்கொடை ஒதுக்கம் தனியான கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2 நிதி மீளாய்வு

நிதி விளைவுகள்

மீளாய்யாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,773,912 தொகையான இலாபமாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 295,352 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,069,264 தொகையான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு உயிரியல் சொத்துக்களின் நேரிய பெறுமதி அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்கீட்டு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2019 ஆம் ஆண்டின் சொத்துக்கள் ஒப்பாய்வின் போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக இனங்காணப்பட்ட ரூபா 9,902,282 ஆன நிலையான சொத்துக்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கிராந்துபோட்டை விவசாய பண்ணையில் விளைவற்று காணப்பட்ட கிரயம் ரூபா 2,351,000 பெறுமதியான 6 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இனங்காணப்படாத ரூபா 9,453,140 பெறுமதிக்குரிய பொருட்கள் மீண்டும் சொத்துக்கள் பதிவேட்டிற்கு சேர்க்கப்பட்டது. பின்னர் 2022 ஆம் ஆண்டில் குறித்த சொத்துக்கள் மீண்டும் இனங்காணப்பட்டு அகற்றப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பு செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	கம்பனியினால் பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 8,156,000 பெறுமதியான 04 வாகனங்கள் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த சொத்துக்கள் பயன்படுத்துவதற்காக மட்டும் கம்பனிக்கு கையளிக்கப்பட்டுள்ளது.	கம்பனியினால் பயன்படுத்தப்படுகின்ற மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்கள் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	கம்பனியின் அகவிதி பத்திரத்தின் பிரகாரம் உரிமை மூலதனம் ரூபா 10 வீதம் 5,000,000 பங்குகளாக இருந்ததுடன் ஆரம்ப பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மட்டும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய பங்குகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் பங்குகள் விநியோகிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	தேவையான பிரகாரம் பங்குகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	செயற்திட்டக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட வெளி முதலீட்டாளருடன் அரச தனியார் கூட்டு முயற்சியாக கம்பனி மீள் கட்டமைப்பதற்காக 2018 செப்தெம்பர் 18 திகதிய இலக்கம் අමප/18/2083/803/031 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச தனியார் முகாமைத்துவத்திற்கு உடன்படிக்கை செய்து மீள்கட்டமைப்பதற்காக 2022 சனவரி 18 ஆம் திகதி இலக்கம் අමප/21/2229/317/025-1 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 யூன் 05 ஆம் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த பணி இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.	அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச தனியார் முகாமைத்துவத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட மீள் கட்டமைப்பதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்கீட்டு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பனியின் அகவிதி பத்திரிக்கையில் பண்ணைகளில் பயிர்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், மொத்த	விலங்குத் தீவனத்திற்குப் போதுமான பணம் இல்லாததாலும் அந்த அலகுகளில் ஏற்பட்ட இழப்புகளாலும் கம்பனி	கம்பனியின் அடிப்படை நோக்கங்கள் வெற்றிகரமாக

	மற்றும் சில்லறையாக கோழிகளை வளர்த்தல், விவசாயிகளுக்கு கோழி வளர்த்தலுக்கு தேவையான உணவு உற்பத்தி, மாடு, பன்றி, கோழி போன்ற உயிரினங்களை பெருக்குதல், தயரித்தல், ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழம், தானிய வகைகள் சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற அடிப்படை நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவை நிறைவேற்றுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் போது எருமை மாடு, பசுமாடு, கோழி, பன்றி மற்றும் ஆடு கட்டுப்படுத்தல் சிறியளவில் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு சிறியளவில் மேற்கொள்ளப்பட்ட பன்றி வளர்ப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2021 ஆம் தொடக்கம் நிறுத்தப்பட்டு பண்ணையிலிருந்த பன்றிகள் 2022 ஆம் ஆண்டில் முழுமையாக விற்பக்கப்பட்டிருந்நது. பொய்லர் கோழி இறைச்சி விற்பனை செய்யும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் வெளியிலிருந்து பொய்லர் கோழி இறைச்சி பெற்றுக் கொண்டு விற்பனை செய்தலும் 2024 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டிலும் 139 ஆடுகள் ரூபா 2,794,310 தொகைக்கு விற்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 ஆண்டு இறுதியில் கம்பனியிடம் 143 எருதுகள் மட்டுமே உயிருள்ள விலங்குகளாக எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.	நேரடியாகக் பாதிக்கப்பட்டதால் பன்றி கட்டுப்பாடு அகற்றப்பட்டது. நிலவும் விலை மாற்றங்களால் நட்டம் ஏற்பட்டதால் பொய்ரல் கோழிகள் விற்பனை நிறுத்தப்பட்டது. பணிப்பாளர் சபை 2023 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ஆடுகளை விற்றது.	நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஆ)	கிராதுருகோட்டை மற்றும் தம்மின்ன பண்ணைகளில் சுமார் 1154 ஏக்கர் நிலம் இருந்த போதிலும், அக் நிலத்தை கம்பனி பயிர் செய்கைக்காக திறம்பட பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2023/24 பெரும்போகத்திற்காக நிலம் பகிர்ந்தளிப்பதற்கான அங்கீகாரம் தாமதித்தமையினால் காணிக்கான கேள்வி குறைவடைந்தது.	நிலம் பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்துவதற்காக நிலம் குத்தகைக்கு வழங்கும் அளவு அதிகரித்துக் கொள்வதற்கு

	கம்பனி வருமானம் ஈட்டும் வழிகளில் ஒன்றாக கம்பனிக்கு சொந்தமான நிலத்தில் பருவகால குத்தகை திட்டத்தின் கீழ் சோளம் மற்றும் நெல் செய்கைக்காக காணியை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், 2023/24 பெரும்போகத்திற்காக கிராதுருகோட்டை பண்ணையிலிருந்து சோளப் பயிர்செய்கைக்காக 91.75 ஏக்கரும், நெல் செய்கைக்காக 11.5 ஏக்கரும் தம்மின்ன பண்ணையிலிருந்து 2023/24 பெரும்போகத்திற்கு 20 ஏக்கர் மட்டும் நெல் செய்கைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு சொந்தமான காணியில் 123.25 ஏக்கர் அதாவது 10.6 சதவீதம் மட்டும் 2024 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.		நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். தொடர்புடைய அங்கீகாரம் தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் 2023/2024 பெரும்போகத்திற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதில் தாமதத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்கீட்டு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருடாந்தம் சுமார் 3000 லீட்டர் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் இயந்திரம் 2023 திசெம்பர் மாதம் தொடக்கம் செயலிழந்து காணப்படுகின்றமையினால் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2025 யூன் 03 ஆம் திகதி வரையிலும் அந்த இயந்திரம் பழுதுபார்க்கப்படவில்லை.	இந்த இயந்திரம் பழுதுபார்க்க முடியாத அளவில் செயலிழந்து காணப்படுகின்றது.	இயந்திரத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் நாளதுவரையாக்கப்பட்டுே பணிச் செல்லப்படாமை தொடர்பில் விசாரணையொன்று நடத்தப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்கள் இனங்காணப்படல் வேண்டும்.
(ஆ)	கிராந்துருக்கோட்டை விவசாயப் பண்ணையில் கால்நடை வளர்ப்பு கட்டுப்பாட்டு பயிற்சி நிலையம் ஒன்றாக உட்படுத்தும் நோக்கில் இலங்கை மகாவலி அதிகார சபையின் “சீ” வலயத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்ட மாட்டுப்பண்ணை, ஆட்டுப்பண்ணைகளை உள்ளடக்கிய நிர்மாணம் ரூபா 9,338,000 ஆன பொருட்கள் 2016 பெப்ரவரி 08 ஆம்	பிற தரப்பினரின் தேவைப்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு கம்பனியிடம் திறன் காணப்படவில்லை.	இந்த கட்டுமானம் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமான முறைமைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக குறித்துரைத்த திட்ட முறைமையொன்று ஏற்படுத்தப்படாதிருந்ததன் காரணமாக கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அந்த சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.